INTERNATIONAL CENTRE FOR PREVENTION AND PROSECUTION OF GENOCIDE
Company Registration No.: 11143022
Head Office : 227, Basement Office, Preston Road, Wembley HA9 8NF, UK
Telephone: +44 (0)786 913 3073 , +44 (0)785 230 4397
email: icppgec@gmail.com website:icppg.org

# ஊடக அறிக்கை

- உடனடி வெளியீட்டிற்காக -

07 மே 2021

**முள்ளிவாய்க்கால் இனவழிப்பின் 12ம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு, அனைத்து தமிழ் புலம்பெயர் அமைப்புக்களும் ஒன்றிணைந்து, பிரித்தானிய அரசாங்கம் ஜெனரல் சவேந்திர சில்வாவிற்கு எதிரான தடை உத்தரவை விதிப்பதன் மூலம் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதியை பெற்றுத்தரும் தனது கடப்பாட்டினை உறுதிப்படுத்தும்படி வலியுறுத்த ICPPG அழைப்பு.**

**லண்டன்:** முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் 12ம் ஆண்டு நினைவேந்தலில் பிரித்தானியாவிலுள்ள தமிழ் புலம்பெயர் அமைப்புக்கள் அனைத்தும் ஒன்றிணைந்து இராணுவத்தளபதி சவேந்திர சில்வா உள்ளிட்ட போர்க் குற்றவாளிகளை தடைசெய்வதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரித்தானிய அரசாங்கத்தினை வலிறுத்தவேண்டும் என இனப்படுகொலையைத் தடுப்பது மற்றும் தண்டிப்பதற்கான சா்வதேச மையம் (ICPPG) கோரிக்கை விடுத்துள்ளது. இது பொறுப்புக்கூறல் தொடர்பில் மேற்கொள்ளப்படும் முக்கிய நடவடிக்கையாக இருக்கும் என்பதோடு பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதியை வழங்குவதற்கான பிரித்தானிய அரசாங்கத்தின் கடப்பாட்டினை உறுதிப்படுத்துவதாகவும் இருக்கும்.

இலங்கைப் பாதுகாப்புப் பிரிவின் தற்போதைய பதில் தலைவராகவும் இராணுவத் தளபதியாகவும் உள்ள சவேந்திர சில்வா[1] உள்ளிட்ட யுத்தக்குற்றவாளிகளை 06 யூலை 2020 அன்று நிறுவப்பட்ட பிரித்தானியாவின் உலகளாவிய மனித உரிமைகள் தொடர்பான (GHR) தடைவிதிப்பு அதிகாரசபையின் கீழ்[2] தடைசெய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு 01 மே 2021 அன்று ICPPG இனால் பிரித்தானியா மற்றும் உலகெங்குமுள்ள யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் பிரித்தானிய அரசிற்கு அவசர வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் 12 ஏப்ரல் 2021 அன்று உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேசத் திட்டம் (ITJP) என்ற அமைப்பு சவேந்திர சில்வா குறித்த 50 பக்கங்களைக் கொண்ட ஆவணத்தினை பிரித்தானியாவின் வெளிநாட்டு, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்திற்கு (FCDO) இற்கு சமா்ப்பித்தமையையும் ICPPG சுட்டிக்காட்டியுள்ளது. அந்த ஆவணமானது 2009 ஆம் ஆண்டு இலங்கையின் வடபகுதியில் இடம்பெற்ற இறுதியுத்தத்தில் 58ம் பிரிவிற்கு தளபதியாக இருந்தவரும் தற்போதைய இராணுவத் தளபதியாக உள்ளவருமான சவேந்திர சில்வா மனிதவுரிமை மீறல்களில் ஈடுபட்டமையை விபரித்துள்ளது. பாதுகாப்பு வலையங்களாக பிரகடனப்படுத்தப்பட்ட இடங்களில் வைத்தியசாலை மற்றும் உணவுக்கான வரிசைகள் மீது இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஷெல் மற்றும் குண்டுவீச்சுக்களிலிருந்து உயிர்தப்பிய தமிழர்களிடமிருந்து பெறப்பட்ட நேரடிச் சாட்சியங்களை உள்ளடக்குகின்றது. அவர்களில் பலர் தற்போது பிரித்தானியாவில் அகதிகளாக வசிக்கின்றனர்.[3]

---

[1] https://www.army.lk/commander#:~:text=General%20LHSC%20Silva%20WWV%20RWP,General%20with%20effect%20from%20the

[2] https://www.gov.uk/government/collections/uk-global-human-rights-sanctions

[3] https://itjpsl.com/assets/press/Final-english-press-release-shavendra-magnitsky.pdf

ஒட்டுமொத்த மனித உரிமை மீறல் சம்பவங்களுக்கு கட்டளையிடும் பொறுப்பினை வகித்தமை தொடர்பான நம்பத்தகுந்த தகவல்கள் காணப்பட்ட காரணத்தினால் 2020 ஆம் ஆண்டு அமெரிக்க அரசாங்கம் சவேந்திர சில்வாவிற்கும், அவரின் குடும்பத்தினரிற்கும் தடை விதித்தமையையும் ICPPG சுட்டிக்காட்டியுள்ளது[4].

***"சவேந்திர சில்வாவிற்கு எதிராக கடுமையான மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதாபிமான சட்டமீறல் குற்றச்சாட்டுகள் இருப்பதால் அவர் இராணுவத்தளபதியாக நியமிக்கப்பட்டமை தொடர்பில் கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயமும் ஏனைய ஐரோப்பிய பங்காளிகளும் தமது கரிசனையை வெளிப்படுத்தின. ஜெனிவாவிலுள்ள மனித உரிமைகள் பேரவையிலும் இது தொடர்பில் பிரித்தானிய அரசாங்கம் தனது கரிசனையை வெளிப்படுத்தியது.*** இருப்பினும், பிரித்தானிய அரசாங்கம் இவ்விடயம் தொடர்பில் எந்தவொரு உண்மையான நடவடிக்கையினையும் எடுக்கவில்லை என்றும் அது ஏமாற்றத்தினையும் கவலையினையும் ஏற்படுத்துகின்றதாகவும்" ICPPG இன் இளையோர் அணியின் தலைவரான செல்வி சுபதர்ஷா வரதராஜா அவர்கள் தெரிவித்தார்.

ICPPG மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

1. 2016, 2017, மற்றும் 2018 இன் அரையாண்டு வரையான காலப்பகுதியில் (26 மாதங்கள்) 50 கடத்தல் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்பதை இலங்கை பத்திரிகைகளினை பயன்படுத்தி இலங்கையிலுள்ள ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர்கள் (JDS) அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு வெளிப்படுத்துகின்றது.
2. 2019 முதல் 2021 வரையான காலப்பகுதியில் தமிழர்களிற்கு இழைக்கப்பட்ட 100 இற்கு மேற்பட்ட சித்திரவதை மற்றும் பாலியல் துஷ்பிரயோக சம்பவங்களை ICPPG ஆவணப்படுத்தியுள்ளது.
3. இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவின் கட்டளையின் கீழ் செயற்படும் பாதுகாப்புப் படையினரால் இலங்கையிலுள்ள தமிழர்களிற்கு எதிராக சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறை சம்பவங்கள் தற்போதும் பரவலாக இடம்பெறுவதற்கான நம்பகமான ஆதாரங்களை ICPPG தொடர்ந்து பெற்றுவருகின்றது.
4. FCDO அல்லது உரிய நிறுவனங்களுடன் இராணுவத்தளபதி சவேந்திர சில்வாவின் கட்டளையின் கீழ் படையினரால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சித்திரவதைகளை நிரூபிக்க பாதிக்கப்பட்டவர்களின் சம்மதத்துடன் மிக இரகசியமான முறையில் சாட்சியங்களைப் பகிர்ந்து கொள்ள ICPPG விரும்புகின்றது.

இதன் அடிப்படையில், "*பிரித்தானியா அரசு இத்தடையினை மேற்கொண்டால், அது ஜெனிவா, ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் பிரித்தானியா தலைமையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அடுத்த கட்டமாகவும் அதன் பொறுப்புக்கூறலின் அடிப்படையில் மற்றொரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையாகவும் அமையும்*" என ITJP யின் தலைவர் ஜஸ்மின் சூக்கா அவர்கள் தெரிவித்த கூற்றிற்கு முழுமையான ஆதரவினை ICPPG தெரிவிக்கின்றது.

மே-18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலையின் 12 ஆம் ஆண்டு நினைவேந்தலை நாம் அனுட்டிக்கும் அதேவேளை, பொறுப்புக்கூறல் மற்றும் நீதியினை

---

[4] https://2017-2021.state.gov/public-designation-due-to-gross-violations-of-human-rights-of-shavendra-silva-of-sri-lanka-under-section-7031c-of-the-department-of-state-foreign-operations-and-related-programs-appropriations-a/index.html

நிலைநாட்டுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள நாம் அனைவரும் பாதிக்கப்பட்டவர்களிற்கு கடமைப்பட்டுள்ளோம் என்பதனை ICPPG நினைவுபடுத்த விரும்புகின்றது. ஆகவே, இக்கடினமான நேரத்தில் அனைவரும் ஒன்றிணைந்து, நீதியைப் பெற்றுக்கொள்ளும் முயற்சியில், படிப்படியாக ஒவ்வொரு ஆண்டும் அடையக்கூடியதாக இருக்கும் நடைமுறைச்சாத்தியமான சிறிய இலக்குகளை வகுக்குமாறும் கேட்டுக்கொள்கின்றது. வெறுமனே அரசியல்வாதிகளின் உரைகளோடு நினைவு நிகழ்வுகளை மேற்கொண்டு காலங்கள் கடந்துசெல்ல அனுமதிப்பதைவிட, இது பாதிக்கப்பட்டவர்களுக்கு செலுத்தும் உண்மையான காணிக்கையாக இருக்கும். அந்த அடிப்படையில், இலங்கையின் யுத்தக் குற்றவாளிகளை பிரித்தானிய அரசு தடைசெய்ய வைப்பது இவ்வருடத்திற்கு பொருத்தமான மற்றும் சாத்திமான இலக்கான அமையும் என ICPPG நம்புகிறது. எனவே இலங்கையின் மிகமோசமான இராணுவத்தளபதி சவேந்திர சில்வா உள்ளிட்ட யுத்தக்குற்றவாளிகளை தடைசெய்வதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரித்தானிய அரசிற்கு அனைத்து புலம்பெயர் அமைப்புக்களும் ஏனைய மனித உரிமை அமைப்புக்களும் ஒன்றிணைந்து அழுத்தம் கொடுக்க வேண்டும் என கோரிக்கை விடுகின்றது. இது இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலையில் பாதிக்கப்பட்டவர்களிற்கு நீதி பெற்றுத்தருவதற்கான தனது வாக்குறுதியை நிரூபிக்க பிரித்தானிய அரசிற்கு வழங்கப்பட்ட வாய்ப்பாகவும் இருக்கும்.

மேலும் ICPPG யின் இளையோர் அணியினரால், இந்த முயற்சி தொடர்பில் இணைய வழி கையெழுத்து போராட்டம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கீழுள்ள இணைப்பினை அழுத்துவதன் மூலம் .இந்த மனுவில் கையெழுத்திடுமாறு தங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

https://www.change.org/p/time-for-the-uk-to-sanction-sri-lanka-s-army-commander-war-criminal-shavendra-silva

முற்றும்.

மேலதிக தொடர்புகளிற்கு:

**திருமதி. கிறிஸ்ரி நிலானி காண்டீபன் BSc, MSc, MSc**
**ஊடக இணைப்பாளர், இனப்படுகொலையைத் தடுப்பது மற்றும் தண்டிப்பதற்கான சர்வதேச மையம்**
**தொலைபேசி இலக்கம்: +44 7579 781 744**
**மின்னஞ்சல்: icppgmedia@gmail.com**

INTERNATIONAL CENTRE FOR PREVENTION AND PROSECUTION OF GENOCIDE
Company Registration No.: 11143022
Head Office : 227, Basement Office, Preston Road, Wembley HA9 8NF, UK
Telephone: +44 (0)786 913 3073 , +44 (0)785 230 4397
email: icppgec@gmail.com website:icppg.org

**ICPPG பற்றி:**

இன அழிப்பை தடுத்தல் மற்றும் தண்டித்தலுக்கான சரவதேச மையம் (ICPPG) ஆனது லண்டனில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தினால் (TGTE) ஆரம்பித்து வைக்கப்பட்டது. எனினும் இன அழிப்பினால் பாதிக்கப்பட்ட அல்லது அச்சுறுத்தப்பட்ட அனைத்து மக்களுக்கும் சேவையாற்றும் வகையில் அது சுதந்திரமான ஒரு அமைப்பாகவே இயங்கிவருகிறது. இதன் உடனடியான கவனம் இலங்கையில் நிகழ்ந்த இன அழிப்பின் மீது குவிந்துள்ளது. ICPPG அரசு சார்பற்ற ஒரு அமைப்பாகவும் சுயாதீனமான ஒரு சட்டரீதியான அமைப்பாகவும் இருப்பதுடன் எமது பிரதான இலக்கானது இனஅழிப்பு மேற்கொண்டவர்களுக்கு எதிரான ஆதாரங்களை சேகரித்து நீதி, சமாதானம் மற்றும் நல்லிணக்கத்திற்காக செயலாற்றுவதாகும்[5].

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தில் CJ Koh பேராசிரியரான முத்துக்குமாரசாமி சொர்ணராஜா LLB (Ceylon), LLM (Yale), LLM, PhD, LLD (London) அவர்களின் வழிகாட்டலின் இதன் செயற்பாட்டுத் திட்டம் வரையப்பட்டது. இவர் லண்டன் School of Economics இன் மனித உரிமைகள் மையத்திற்கான சிறப்பு வருகை பேராசிரியர் ஆவார். இவர் கோலாலம்பூரில் உள்ள மலேசிய பல்கலைக்கழகத்தில் சர்வதேச சட்டத்திற்கான துங்கு அப்துல் ரஹ்மான் பேராசிரியராக இருந்தவர். இவர் அவுஸ்திரேலியாவில் உள்ள Tasmania பல்கலைக்கழகத்தின் சட்டப்பள்ளிக்கு தலைவராக இருந்தவர். இவர் இலங்கை பல்கலைக்கழகம், London School of Economics, லண்டன் கிங்ஸ் கல்லூரி மற்றும் யேல் சட்ட பள்ளி ஆகியவற்றில் சட்டம் பயின்றவர்.

2014 இல் சாட்சி வாக்குமூலங்களை சமர்ப்பிப்பது மற்றும் பாதிக்கப்பட்டவர்களுடனான நேர்காணல்களை ஒழுங்கமைப்பதன் மூலமாக நாம் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு (UNHRC) உதவ ஆரம்பித்தோம். இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவிப்பது என மார்ச் 2014 இல் மேற்கொள்ளப்பட்ட தனது **A/HRC/25/1** தீர்மானத்தின் படி, “கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் *(LLRC),* காலத்தில் இலங்கையில் இரு தரப்பாலும் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்ட கடுமையான அத்துமீறல்கள் மற்றும் மனித உரிமைகள் துஷ்பிரயோகங்கள் மற்றும் அது தொடர்பான குற்றங்கள் குறித்த விரிவான விசாரணைகளை மேற்கொள்ளவும், தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்வதை தவிர்த்தல் மற்றும் பொறுப்புகூறலை உறுதி செய்தல் என்னும் நோக்குடன் சம்மந்தப்பட்ட நிபுணர்கள் மற்றும் சிறப்பு நடைமுறைக்கான ஆணை பெற்றவர்களின் உதவியினை பெற்று, இவ்வாறான மீறல்கள் மற்றும் அவை சார்ந்த குற்றங்கள் தொடர்பான உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளை நிரூபணம் செய்யவும்” UNHRC மனித உரிமைகளுக்கான ஐ.நா உயர்ஸ்தானிகரை கேட்டுக்கொண்டது. ஆணைக்குழுவானது தனது இருபத்து-ஏழாவது கூட்டத்தொடரில் விசாரணைகள் குறித்து வாய்மொழி மூலமாக விளக்குமாறும் தனது இருபத்து எட்டாவது கூட்டத்தொடரில் விரிவான அறிக்கையினை அளிக்குமாறும் உயர்ஸ்தானிகரை கேட்டுகொண்டது. இந்த ஆணையின் பிரகாரம், மனித உரிமைகளுக்கான ஐ.நா ஆணையாளர் ஜெனிவாவினை தளமான கொண்ட OHCHR இன் இலங்கை குறித்த விசாரணை (OISL) இனை அமைத்தார்[6]. இலங்கையின் அதிகாரிகளால் இழைக்கப்பட்ட கடுமையான அத்துமீறல்கள், மனித உரிமைகள் துஷ்பிரயோகங்கள் மற்றும் போர்

[5] http://icppg.org/about/
[6] https://www.ohchr.org/en/hrbodies/hrc/pages/oils.aspx

INTERNATIONAL CENTRE FOR PREVENTION AND PROSECUTION OF GENOCIDE
Company Registration No.: 11143022
Head Office : 227, Basement Office, Preston Road, Wembley HA9 8NF, UK
Telephone: +44 (0)786 913 3073 , +44 (0)785 230 4397
email: icppgec@gmail.com website:icppg.org

குற்றங்களை உறுதிப்படுத்தும் OISL ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை 2015 செப்டம்பரில் வெளியிடப்பட்டது[7]. இந்த அறிக்கையின் அடிப்படையில் குற்றவியல் மற்றும் உரிமையியல் வழக்குகளை கொண்டுவரும் நோக்கில் தொடர்ந்து நாம் சர்வதேச வழக்கு தொடுநர்களுடன் இணைந்து செயல்பட்டு வருகின்றோம்.

---

[7] https://www.ohchr,org/EN/HRBodies/HRC/Regu;arSessions/.../A.HRC.30.CRP.2_E.docx